Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 351 of 2017**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.22**
Defence
Court

| | |
|---|---|
| Name | சுந்தர் |
| Father's name | கண்ணையன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 48 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 21st day of November 2023.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 21st day of November 2023.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் 1 முதல் 4, 8,14, 15, 18,19 ஆஜர். எதிரிகள் 6,10 முதல் 13 ஆஜரில்லை, குவி முச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.

**முதல்விசாரணை** 1. நான் பண்ருட்டி வட்டம், ஒரையூர் கிராமத்தில் குடியிருந்து டிரைவராக வேலை பார்த்து வருகின்றேன். வழக்கு சம்பவத்தில் இறந்துபோன

கண்ணையன் எனது தகப்பனார். என் தகப்பனாருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்தது. ஒரையூர் மலட்டாறு கரை ஓரமாக எங்கள் ஊரை சேர்ந்த ஆதிலட்சுமி (சின்னபொண்ணு) என்பவர் சாராயம் விற்று வந்தார். அவரது கடையில் சென்று, 29.11.2001 அன்று என் தகப்பனார் சாராயம் குடித்து விட்டு வந்தார். சாயங்காலம் தனக்கு தலை சுற்றுவதாகவும், உடம்பில் ஏதோ செய்வதாகவும், பொதுவாக எங்களிடம் கூறினார். இரவு பத்து மணிக்கு, நாங்கள் அவரை கடலூர் அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தோம். அதன்பிறகு 01.12.2001 அன்று காலை 06.30 மணி அளவில் என் தகப்பனார் இறந்துவிட்டதாக மருத்துவமனையில் தகவல் சொன்னார்கள். நானும் அங்கு தான் இருந்தேன். என் தகப்பனார் இறந்துவிட்டார் என்ற தகவலை நேரில் பார்த்து தெரிந்து கொண்டேன். என் தகப்பனார் சாராயம் குடித்ததால் தான் இறந்துபோனார். என் அப்பாவை போலவே அந்த சமயம் நிறைய நபர்கள் சாராயம் குடித்துவிட்டு இறந்துவிட்டார்கள். இவ்விவரம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் 1 முதல் 4, 8,12,18,19 தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. போலிசார் சொல்லிக்கொடுத்த விவரங்களை நீதிமன்றத்தில் தெரிவித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>எதிரிகள் 6,10,11,13 தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. போலிசார் சொல்லிக்கொடுத்த விவரங்களை நீதிமன்றத்தில் தெரிவித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 351 of 2017**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.23**

Defence

Court

| | |
|---|---|
| Name | காளிதாஸ் |
| Father's name | கேசவன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 58 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 21st day of November 2023.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 21st day of November 2023.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் 1 முதல் 4, 8,14, 15, 18,19 ஆஜர். எதிரிகள் 6,10 முதல் 13 ஆஜரில்லை, குவி முச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.

**முதல்விசாரணை**

1. நான் பண்ருட்டி வட்டம், ஒரையூரில் குடியிருந்துவிவசாயம் செய்து வருகின்றேன். 2001 ஆம் வருடம் விஷசாராயம் அருந்தி பலர் இறந்துவிட்டதாக எங்கள் கிராமத்தில் பேசிக்கொண்டார்கள். நான் நிலத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது புதுப்பேட்டை காவல்நிலையத்திலிருந்து போலிசார் அங்கு வந்தார்கள். என் நிலத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தள்ளி உள்ள இடத்தில் வரைபடம் வரைந்துக்கொண்டிருந்தார்கள். அங்கு வந்து போலிசார் விசாரித்தது தொடர்பாக என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் எனக்கு தெரிந்த தாமோதரன் என்பவரும் பார்வை மகசரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். **பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த பார்வை மகசர் அதசாஆ 2 ஆகும்**. இந்த வழக்கு தொடர்பாக வேறு எந்த விவரங்களும் எனக்கு தெரியாது.

எதிரிகள் 1 முதல் 4, 8,12,18,19 தரப்பில் குறுக்குவிசாரணை

2. நான் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையெழுத்தை காவல்நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் சரியல்ல, சம்மந்தப்பட்ட இடத்தில் வைத்து தான் போட்டுக்கொடுத்தேன். போலிசார் பார்வை மகசர் தயார் செய்த இடம் யாருக்கு சொந்தமான நிலம் என்றால், எனக்கு சொந்தமான நிலம். அந்த சமயம் ஊர்க்காரர்கள் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் ஐந்து அல்லது ஆறு நபர்கள் இருந்தார்கள். போலிசார் தகவல் சொல்லிய பிறகு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் ஆமாம். பார்வை மகசரில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துகொடுத்துவிட்டு தற்போது அதனை மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் 6,10,11,13 தரப்பில் குறுக்குவிசாரணை

3. மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார். அவ்விவரம் பதிவு செய்யப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 351 of 2017**

Deposition of ....... witness for ................. Prosecution........**P.W.24**
Defence
Court

| | |
|---|---|
| Name | முருகன் |
| Father's name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 42 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 21st day of November 2023.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 21st day of November 2023.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் 1 முதல் 4, 8,14, 15, 18,19 ஆஜர். எதிரிகள் 6,10 முதல் 13 ஆஜரில்லை, குவி முச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.

**முதல்விசாரணை** 1. நான் பண்ருட்டி வட்டம், பலாப்பட்டு கிராமத்தில் குடியிருந்து செங்கல் அறுக்கும் வேலை செய்து வருகின்றேன். வாத்து முருகன், பாலசுப்ரமணியன்,

காக்காமண்டையன் மற்றும் ஆனந்தாயி ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது. நான் எப்போதும் சூளையிலேயே இருப்பேன். எங்கள் பகுதியில் விஷசாராயம் குடித்துவிட்டு சிலர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அந்த விவரம் எனக்குநேரடியாக தெரியாது. நான் எப்போதாவது தான் ஊருக்குள் வருவேன்.

**(இந்நிலையில், சாட்சியை கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். குறுக்குவிசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு, அரசு தரப்பில் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிஸ் விசாரணையில், கடந்த 27.11.2001 ஆம் தேதி காலை சுமார் பத்து மணி அளவில் நான் வயலுக்கு சென்றிருந்தபோது, அங்கு DL 8C1113 என்ற பதிவெண் கொண்ட பிரவுன் நிற கண்டெசா கார் பலாப்பட்டு ஏரிக்கரைக்கு வந்து நின்றதாகவும், அதை பார்த்தவுடன் எங்கள் ஊர் சாமிதுரை, சீனுவாசன், தங்கதுரை ஆகியோர் அங்கு வந்ததாகவும், அந்த காரிலிருந்து பாண்டிச்சேரி அரங்கனூரை சேர்ந்த சுப்ரமணியன் மற்றும் அவருடன் இரண்டு நபர்கள் இறங்கியதாகவும், பின்னர் PY01 P 8910 என்ற இருசக்கர வாகனத்தில் அங்கு அரங்கனூரை சேர்ந்த காக்காமண்டையன் என்கிற சுப்ரமணியனும் சக்திவேல் என்பவரும் வந்ததாகவும், காரை எதிர்பார்த்து வாத்துமுருகன் ஆட்களை தயாராக வைத்து இருப்பதாக சொன்னதாகவும், மேற்படி காரிலிருந்து 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேன்கள் 11 ஐயும் 20 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேன்கள் 4 ஐயும் விஸ்வநாதன், தேவேந்திரன், ராஜேந்திரன் ஆகியோர் இறக்கி வைத்ததாகவும், சாராயத்தை இறக்கி வைத்துவிட்டு கார் சென்றுவிட்டதாகவும், வாலு சுப்ரமணியத்திடம் இது சம்மந்தமாக நான் கேட்டதற்கு மெத்தனால் பச்சை சாராயம் மும்பையிலிருந்து சென்னைக்கு வந்து, அங்கிருந்து சக்திவேல் வாங்கி வந்ததாக சொன்னதாகவும், பின்னர், விஸ்வநாதன், தேவேந்திரன், ராஜேந்திரன் ஆகியோர் வாத்து சுப்ரமணியன் சொன்னபடி ஏரிக்கரைக்கு மேல் உள்ள கிருஷ்ணமூர்த்தியின் கொய்யா தோப்பில் பள்ளம் தோண்டி சாராயத்தை புதைத்ததாகவும், பின்னர் அன்று மதியம் நான்

வேலை விஷயமாக வெளியே சென்று விட்டு வீட்டிற்கு திரும்ப வந்தபோது, வாத்து சுப்ரமணியன் PY01 K 3801 என்ற இருசக்கர வாகனத்தில் ஐம்பது லிட்டர் கேனை பின்சீட்டில் வைத்து கட்டிக்கொண்டும், ஒரு ஐம்பது லிட்டர் கேனை முன்பக்கமாக மடியில் வைத்துக்கொண்டு மொட்டகாளை வீட்டு பக்கமாக போனதாகவும், அப்போது இரவு சுமார் பத்தரை மணி இருக்கும் என்றும், பலாப்பட்டு பவுனாம்பாள், நத்தம் வில்லுக்கட்டி என்கிற கேசவன், சங்கர் , மாடசாமி, ஒரையூரை சேர்ந்த ஆதிலட்சுமி என்கிற சின்னபொண்ணு, மேல்அருங்குணம் மொட்டக்காளை, ஆனந்தாயி ஆகியோர் ரொம்ப நாளாக சாராயம் விற்றுக்கொண்டிருப்பதாகவும், அவர்களுக்கு வேண்டிய சாராயத்தை, வாத்துமுருகன், வாலு சுப்ரமணியன் ஆகியோர் வாங்கி சப்ளை செய்வது எனக்கு தெரியும் என்று காவல் துணை கண்காணிப்பாளரிடம் வாக்குமூலம் வழங்கிவிட்டு, தற்போது எனக்கே தெரிந்த வேறுகாரணங்களுக்காக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் 1 முதல் 4, 8,12,18,19 தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. குறுக்குவிசாரணை ஏதுமில்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார். அவ்விவரம் பதிவு செய்யப்பட்டது.

<u>எதிரிகள் 6,10,11,13 தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. குறுக்குவிசாரணை ஏதுமில்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார். அவ்விவரம் பதிவு செய்யப்பட்டது.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*